


# கோட்டாகோகம தாக்குதல்

இலங்கை காலி முகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு எதிராக 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான நிகழ்வு ஆய்வு

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

# கோட்டாகோகம தாக்குதல்

இலங்கை காலி முகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு எதிராக 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான நிகழ்வு ஆய்வு

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

**ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலையம்**

டிசம்பர் 2022

ஆய்வு உதவி: சுனேத் கஜநாயக்க/ சமது பஸ்நாயக்க

நிபுணத்துவ நோக்கு: பசில் பெர்னாண்டோ, AAL

ஆசிரியர்: அஜித் பெரகும் ஜயசிங்க

மொழிபெயர்ப்பு: Creative Content Consultants (www.contentlanka.com)

திட்ட முகாமைத்துவம்: ரஷ்மிகா விஜேசிங்க

மேற்பார்வை : பிலிப் திஸாநாயக்க

வெளியீடு: ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலையம்

அச்சுப்பதிப்பு: adARTS - மஹரகம

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 4 |
| நிறைவேற்றுச் சுருக்கம் | 6 |
| ஆய்வு முறை | 8 |
| மே 9 சம்பவத்தின் பின்னணி | 9 |
| ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட “கோட்டாகோகம” எனப்படும் போராட்டத்தளத்தின் வரைபடம் | 14 |
| 2022 மே 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பு | 15 |
| ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட போராட்டத் தளத்தின் மீது 2022 மே மாதம் 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் | 16 |
| தாக்குதலுக்கு முன்னர் பொலிஸார் உரிய முறையில் செயற்படாமை | 21 |
| நீதிமன்ற அறிக்கைகள் மூலம் வெளியான உண்மைகள் | 23 |
| தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்கள் ஊடாக கிடைக்கப்பெற்ற தகவல்கள் | 28 |
| வழக்கு எண் 22046/22இல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், உயிர் மற்றும் உடைமை சேதங்கள் | 30 |
| சட்ட நடவடிக்கையின் முன்னேற்றம் | 31 |
| இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பங்கு மற்றும் பரிந்துரைகள் | 34 |
| ஆய்வின் பரிந்துரைகள் | 37 |

# முன்னுரை

இலங்கை 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வரலாறு காணாத அளவிற்கு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இதன் விளைவாக எழுந்த மக்கள் எழுச்சியில் பல தனித்துவம் மிக்க அம்சங்களை காணக்கூடியதாக இருந்தது. இவற்றை அங்கீகரிப்பதோடு, உண்மையை ஆவணப்படுத்துவதும் அவசியமாகும்.

அரசியல் கட்சிகளினதும் தொழிற்சங்கங்களினதும் தலைவர்கள், இந்தப் போராட்டத்தை ஆரம்பத்திலேயே தவறாக எடைபோட்டனர். சில கட்சித் தலைவர்கள் கேலி செய்தனர். ஆனால், அது இரவு பகலாக தொடர்ச்சியான போராட்டமாக மாறியதால், மக்களின் பங்கேற்பு படிப்படியாக அதிகரித்தது. அத்தோடு, காலிமுகத்திடலிலுள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இதேபோன்ற பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. பாராம்பரிய அரசியல் கட்சிகளுக்கு இப்போராட்டம் பாரிய சவாலாக காணப்பட்டது. இப்புதிய கலாசாரம் நாடளாவிய ரீதியில் பரவியதால், கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இந்த போராட்டத்தில் இணைய வேண்டி ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு காணப்பட்ட ஆதரவினை, மே 9 தாக்குதலுக்கு எதிராக மக்கள் அளித்த பதில் சுட்டிக்காட்டுகின்றது. நாடெங்கிலுமுள்ள மக்களும், ஏனைய நாடுகளில் வாழும் இலங்கையர்களும் இந்த தாக்குதலுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். ஆனால், பழைமையான மற்றும் தோல்வியுற்ற வன்முறை மூலோபாயத்துடன் இந்த போராட்டத்திற்குள் நுழைந்த ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்று இந்த தாக்குதலை நடத்தியது. இதன் விளைவாக, பல உயிர்கள் காவுகொல்லப்பட்டதோடு பெருமளவான பொது மற்றும் தனியார் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இந்த போராட்டத்திற்கு நேர்மையாக ஆதரவு வழங்கியவர்கள் இப்படியொரு பதிலை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

ரைட் டு லைஃப் மனித உரிமைகளுக்கான நிலையமானது, 2022ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் போது நடந்தேறிய மனித உரிமை மீறல்கள், வன்முறைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து, பதிவுசெய்து, இனங்கண்டு, அதற்கான பரிந்துரைகளை வழங்கும் நோக்கில் தொடர்ச்சியான ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

இங்கு நாம் மூன்று முக்கிய நிகழ்வு ஆய்வுகள் தொடர்பாக கவனஞ்செலுத்துவோம். 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி ரம்புக்கனையில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூடு, 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் போராட்டக்காரர்கள் மீது நடத்திய தாக்குதல் மற்றும் அதேநாளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் என்பனவே அவையாகும்.

இந்த ஆய்வின் ஊடாக, நாம் பொதுக் கொள்கை முடிவுகளில் பொதுமக்களின் பங்களிப்பை உறுதி செய்வதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள், அத்தகைய கொள்கை முடிவுகளை ஆக்கப்பூர்வமாக மறுபரிசீலனை செய்தல், மாற்றத்திற்கான பரிந்துரை, போராடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், அமைதியான போராட்டங்கள், கிளர்ச்சிகளின் போது பின்பற்ற வேண்டிய கொள்கைகள் மற்றும் சட்டம், பொலிஸ் படையின் பயன்பாடு போன்றவை குறித்து கவனம் செலுத்த முயற்சிக்கின்றோம்.

**பிலிப் திஸாநாயக்க**
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
ரைட் டு லைஃப் மனித உரிமைகளுக்கான நிலையம்

# நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கை முன்னொருபோதும் சந்தித்திராத அளவிற்கு, 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி உருவாகி வந்தது. இலங்கையின் இறக்குமதி வருமானத்தில் ஏற்பட்ட சரிவு மற்றும் ஏற்றுமதி செலவீனங்களின் அதிகரிப்பு மற்றும் அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவீனங்களுக்கிடையில் பாரிய ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திய நிதிப்பற்றாக்குறை ஆகியவற்றால் ஏற்பட்ட நிலுவைத் தொகையே நெருக்கடியை உருவாக்கியது.

இரசாயன பசளைகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்து 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் காரணமாக விவசாயிகளால் இலங்கையில் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. விவசாயிகளின் எதிர்ப்பு நடவடிக்கை மற்றும் பொதுமக்களின் விமர்சனங்களைத் தொடர்ந்து குறித்த தடை நவம்பர் மாதம் நீக்கப்பட்டது. எனினும், நெல் அறுவடை உள்ளிட்ட விவசாய உற்பத்தியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது.

நீண்டகாலமாக நிலவும் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி, 2021ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் தீவிரமடையவே, 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கமானது ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்கும் வகையிலான சுற்றறிக்கைகளை வெளியிட்டது.

2021ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு பகுதியில் சமையல் எரிவாயு தாங்கிகள் தொடர்ச்சியாக வெடித்தமையானது, இலங்கையில் ஏற்பட்ட மற்றுமொரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்தது. சமையல் எரிவாயு தாங்கி வெடிப்பு காரணமாக ஏழு உயிரிழப்புகளும் கடுமையான விபத்துக்களும் பதிவாகின. ஆனால், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு எவ்வித இழப்பீட்டையும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் வழங்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் கலந்துரையாடல்களை நடத்தி கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென எதிர்க்கட்சியும் பொருளாதார வல்லுநர்களும் 2021ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்மொழிந்தனர். எனினும், சர்வதேச நாய நிதியத்துடன் கலந்துரையாடுவது தொடர்பாக நிதியமைச்சில் காணப்பட்ட இருவேறு கருத்துக்கள் காரணமாக இதனை முன்னெடுக்க காலதாமதமானது.

இதேவேளை, ஏப்ரல் முதல் வாரத்தில், நிதியமைச்சர் உள்ளடங்கலான அமைச்சரவையும் மத்திய வங்கியின் ஆளுநரும் இராஜினாமா செய்ததையடுத்து, ஏப்ரல் 12ஆம் திகதி, வெளிநாட்டுக் கடன் சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக இலங்கை அறிவித்தது.

மிரிஹானவில் அமைந்துள்ள அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக இல்லத்தின் முன் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக, பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைகளை பிரயோகித்ததோடு, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் கைதுசெய்தனர். அதே சந்தர்ப்பத்தில், அரசுக்கு எதிரான போராட்டமும் வலுப்பெற்றது. அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி, கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக தொடர்ச்சியான கவனயீர்ப்பு போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ச்சியாக, ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் “கோட்டாகோகம” என்ற பெயரில் நிரந்தரமாக ஒரு ஆர்ப்பாட்டக் களம் ஸ்தாபிக்கப்பட்டது.

மே 9ஆம் திகதியன்று கோட்டாகோகம போராட்டக் களத்திலும், பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு முன்பாக நிறுவப்பட்ட “மைனாகோகம” போராட்டக் களத்திலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த கும்பலொன்று நடத்திய தாக்குதல் தொடர்பாக, இந்த ஆய்வு பிரதான கவனம் செலுத்துகின்றது.

அப்போதைய ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடைய குழுவே இந்த தாக்குதலை நடத்தியது. தாக்குதலை தடுப்பதற்கு பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காததால் சந்தேகம் எழுந்தது. சம்பந்தப்பட்ட

அதிகாரிகள், பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்புச் செயலாளரின் செயற்பாடுகள் பிரச்சினைக்குரியவையாக காணப்பட்டன. தாக்குதல் நடத்தியவர்கள் மீது உரிய விசாரணை நடத்தப்படுமா, நீதி வழங்கப்படுமா, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படுமா என்பதில் பாரிய பிரச்சினை காணப்படுகின்றது.

அமைதிவழி போராட்டத்திற்கு எதிராக நடத்தப்பட்ட அநீதியானதும் காட்டுமிராண்டித்தனமானதுமான தாக்குதலாக இது பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், இது சமூகத்தில் தணிந்து கிடந்த ஒரு அழுத்தத்தை வெடிக்கச் செய்தது மற்றும் ஒரு மேலாதிக்க, ஊழல் ஆட்சியை உருவாக்கி, இறுதியில் நாட்டினை பாரிய கடன் நிலைக்கு இட்டுச்செல்ல வழிவகுத்த கொள்கைகளை உருவாக்கியதாக எதிர்க்கட்சிகளால் குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஷ குடும்பத்தின் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிரான தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு பின்னர் வழிவகுத்தது. மக்கள் எழுச்சியின் ஒரு முக்கியமான திருப்புமுனையாக மே தாக்குதல் பதியப்படுகின்றது.

## ஆய்வுமுறைமை

தாக்குதலுடன் தொடர்புடைய தரப்பினருடன் நடத்தப்பட்ட நேர்காணல்களில் இருந்து பெறப்பட்ட தகவல்கள், ஊடக அறிக்கைகள், நீதிமன்ற அறிக்கைகள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விடயங்கள், பொலிஸ் மற்றும் ஏனைய துறைகளின் அறிக்கைகள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் பின்னர் அவற்றை விரிவான முறையில் பகுப்பாய்வு செய்யும் முறையே இந்த ஆய்வில் பின்பற்றப்பட்டுள்ளது. முழு எதிர்ப்பு பிரச்சாரத்தினையும் நோக்குவதை விட, ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்தின்போது மே 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாகவே இங்கு பிரதானமாக கவனஞ்செலுத்தப்படுகின்றது. இலங்கை வரலாற்றில் இது மிகமுக்கிய சம்பவமாக கருதப்படுவதோடு, அன்றைய தினம் பிற்பகல் இடம்பெற ஆரம்பித்த சம்பவங்கள், ஜுலை நடுப்பகுதியில் ஜனாதிபதி தனது பதவியை இராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து உச்சத்தை தொட்டது. இவ்வாறான பரந்த பின்னணியில், மே 9 சம்பவத்தை நாம் பகுப்பாய்வு செய்கின்றோம்.

சம்பவத்தின் பின்னணி, தாக்குதலின் பின்னணி, அரசுக்கும் தாக்குதலுக்கும் இடையேயான தொடர்பு, தாக்குதல் நடத்தப்பட்ட விதம், தாக்குதலை தடுக்கத் தவறிய பொலிஸ், தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புகள், தாக்குதல் மற்றும் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பான சட்டத்தை செயற்படுத்துதல் ஆகியவற்றின் மீது கவனஞ்செலுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

பெறுமதிமிக்க தகவல்களை தம்வசம் கொண்டிருக்கும் சில தரப்பினர் அவற்றை எம்மிடம் தெரிவிக்க முன்வராமை நாம் ஆய்வினை மேற்கொள்கையில் எதிர்கொண்ட பிரதான பிரச்சினையாகும். தம் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படும் என்ற அச்சத்தின் காரணமாகவே அவர்கள் முன்வரவில்லை. தாக்குதல்கள் நடத்தியவர்களின் தரப்புடன் கலந்துரையாடுவதற்கான எவ்வித வாய்ப்பும் கிட்டவில்லை. அதற்கு பதிலாக, தாக்குதல் குறித்த வெளிப்புற அவதானிப்புகளையும் நீதிமன்ற அறிக்கைகளையுமே நாம் நம்பவேண்டியிருந்தது. தாக்குதல் தொடர்பாக ஊடகவியலாளர்களும் ஆர்வலர்களும் முகப்புத்தகத்தில் நேரலையாக வழங்கிய உள்ளடக்கங்கள் தமது சமூக தரங்களுக்கு உட்பட்டவை அல்லவென இணையத்தளங்கள் அவற்றை அகற்றின. இதனால், பெறுமதிமிக்க பல சான்றுகள் அழிக்கப்பட்டன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி பொலிஸாரிடமிருந்து பெற்றுக்கொண்ட உத்தியோகபூர்வ தகவல்களுக்கும் ஆரம்பத்திலிருந்து திரட்டிய தகவல்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க இடைவெளி காணப்பட்டது.

தாக்குதல் குறித்த நீதிமன்ற செயற்பாடுகள் வழமைபோன்று தாமதிப்பதால், இந்த அறிக்கையை எழுதும் சந்தர்ப்பத்தில் எந்த வழக்கும் நிறைவுசெய்யப்படவில்லை.

இந்த ஆய்வின் அடிப்படை மொழியாக சிங்களம் பயன்படுத்தப்பட்டது. முதலாவது அறிக்கை சிங்கள மொழியில் தொகுக்கப்பட்டு, பின்னர் அது ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

# மே 9 சம்பவத்தின் பின்னணி

கொவிட் தொற்றுநோய் காரணமாக, 2021ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அப்போது நிகழ்நிலை கற்பித்தலை புறக்கணிக்க ஜுலை மாதம் 12ஆம் திகதிமுதல் ஆசிரியர் சங்கங்கள் தீர்மானித்தன. நீண்டகாலமாக நிலவி வரும் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு கோரி நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களின் போராட்டம் ஒன்றும் இடம்பெற்றது. 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி பாடசாலைகளை மீள ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்த சந்தர்ப்பத்திலும், சம்பளப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வுகாணப்படவில்லை. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கும் சுற்றறிக்கைகளை 2022ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அரசாங்கம் வெளியிட்டது[1].

2022ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு பகுதியில் சமையல் எரிவாயு தாங்கிகள் வெடித்தமை இலங்கை எதிர்கொண்ட மற்றுமொரு பாரிய பிரச்சினையாகக் காணப்பட்டது. மௌபிம பத்திரிகையின் ஊடகவியலாளரான உதேனி சமன்குமார குறிப்பிடுகையில், "எரிவாயு தாங்கிகள் வெடித்த விபத்துக்களில் சிக்கி ஏழு மரணங்கள் சம்பவித்துள்ளன, 16 பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டமை தொடர்பாக 18 சம்பவங்கள் பதிவாகின" என்றார். 2019ஆம் ஆண்டு 78 சமையல் எரிவாயு விபத்துக்கள் பதிவாகின. 2020ஆம் ஆண்டு 31 விபத்துக்களும் 2021ஆம் ஆண்டு 847 விபத்துக்களும் பதிவாகின. இதனை மேலும் விளக்கிக் கூறினால், லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினால் 2021ஆம் ஆண்டு சந்தையில் விற்பனைக்காக அனுப்பப்பட்ட 2.8 மில்லியன் எரிவாயு கொள்கலன்களில் 797 கொள்கலன்கள் விபத்துக்குள்ளாகின. ஆனால், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு லிட்ரோ எரிவாயு நிறுவனம் எவ்வித இழப்பீடுகளையும் வழங்கவில்லை.[2]

கொவிட் தொற்றுநோய் காரணமாக, 2020ஆம் ஆண்டில் இலங்கையின் உள்நாட்டு உற்பத்தி 3.5 வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆனால், 2021ஆம் ஆண்டு 3.3 வீதத்தினால் அதிகரித்துள்ளது[3]. கடன் தரமதிப்பீடுகள் குறைக்கப்பட்டதன் காரணமாக சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான அணுகலை இலங்கை இழந்தது மற்றும் அதன் வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவதற்கு உத்தியோகபூர்வ இருப்புகளைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்தோடு, வங்கித் துறையின் கடன்களைப் பயன்படுத்தி இறக்குமதிகளுக்குத் தொடர்ந்து பணம் செலுத்த வேண்டியிருந்தது. உத்தியோகபூர்வ கையிருப்பானது, 2019ஆம் ஆண்டு 7.6 பில்லியன் டொலர்களாகக் காணப்பட்ட நிலையில், 2022ஆம் ஆண்டு ஜுன் மாதம் 400 மில்லியன் டொலர்களாக குறைவடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இருந்து, அந்நியச் செலாவணி பணப்புழக்கக் கட்டுப்பாடுகள் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தேவையான எரிபொருள், மருந்துகள், திரவ எரிவாயு மற்றும் உள்ளீடுகள் ஆகியவற்றிற்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டது. மணிக்கணக்கில் மின்வெட்டு நீடித்தது. மத்திய வங்கியின் அப்போதைய ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் அப்போதைய நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் ஏப்ரல் முதல் வாரத்தில் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர். புதிய நிதியமைச்சராக அலி சப்ரியும், மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால் வீரசிங்கவும் நியமிக்கப்பட்டனர்.

வெளிநாட்டு கடன் சேவையை இடைநிறுத்துவதாக, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி மத்திய வங்கியின் புதிய ஆளுநர் அறிவித்தார். அதன் பின்னர், கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு சட்ட மற்றும் நிதி ஆலோசகர்களை நியமித்தார். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டியின் படி, 2022ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து பணவீக்கம் மிக வேகமாக அதிகரித்து, செப்டெம்பர் மாம் 64.1 வீதமாக அதிகரித்தது.[4]

1. https://www.themorning.lk/teachers-salary-circular-finally-issued/
2. මව්බිම පුවත්පත, 2022 ජුනි 18
3. National Output, Expenditure and Income, 2022, Central Bank of Sri Lanka
4. https://www.cbsl.gov.lk/en/measures-of-consumer-price-inflation

2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டார். எனினும், பொருளாதார நெருக்கடி தொடர்ந்துசெல்வதோடு. அரசியல் பதட்டநிலைகள் அதிகமாகவே உள்ளன. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2022ஆம் ஆண்டின் இறுதியில் 9.2 வீதமாகவும் 2023 இல் மேலும் 4.2 வீதமாகவும் குறையுமென உலக வங்கி கணிப்பிட்டுள்ளது.[5]

2022ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக முன்னொருபோதும் இல்லாத வகையில் மக்கள் எழுச்சி ஏற்பட்டது. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இந்த மக்கள் எழுச்சி பரவியதோடு, அங்கும் பல்வேறு பொது நடவடிக்கைகள் இடம்பெற்றன.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி பொதுமக்கள் பல இடங்களில் போராட்டங்களை முன்னெடுத்தனர். கொழும்பின் புறநகர் பகுதியான மிரிஹானவில் அமைந்துள்ள, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக இல்லத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக, பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைகளை பிரயோகித்ததோடு, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் கைதுசெய்தனர். இந்த சம்பவத்தோடு, அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான எதிர்ப்பு வலுவடைந்தது. அதன் நீட்சியாக கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தின் முன் வாயிலை ஆக்கிரமித்து தொடர் போராட்டமொன்று ஆரம்பமானது. அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்றும், தற்போதைய அரசியல் யாப்பை மாற்றியமைக்குமாறும் அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், ஆர்ப்பாட்டக் களத்தில் கூடாரங்களையும் கொட்டில்களையும் அமைத்து அந்த இடத்தை “கோட்டாகோகம“ என பெயரிட்டனர். அன்று முதல், ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதிவரை கோட்டாகோகம ஆர்ப்பாட்டக் களம் அமைந்திருந்தது. பின்னர், பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு முன்பாகவும், கண்டி, காலி, குருநாகல், அநுராதபுரம் போன்ற இடங்களிலும் இவ்வாறான போராட்டக் களங்களை நிறுவி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டக் களத்திற்கு “மைனாகோகம“ என பெயரிடப்பட்டது. இப்போராட்டத்தின் ஆரம்பத்தில், ரூபுழவயபுழஉழஅந என்ற ஹேஷ்டெக் பயன்படுத்தப்பட்டு சமூக வலைத்தளங்கள் மூலம் பரப்பப்பட்டது.

குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்து தோன்றிய அமைதியான போராட்டங்கள் பெரும்பாலும் அமைதியானவையாக இருந்தபோதும், பின்னர் அவை ஓரளவு ஆக்ரோஷமாக மாற்றம் பெற்றது. எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள், பொது இடங்களை ஆக்கிரமித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காலி முகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து அதனை பிரதான போராட்டத் தளமாக்கினர்.

குறித்த காலப்பகுதியில், ஆயிரக்கணக்கான மக்கள் இந்த போராட்டத்தில் இணைந்தனர். மேலும், அடக்குமுறைகள், மனித உரிமை மீறல்கள், தாக்குதல்கள் மற்றும் சித்திரவதைகள் உள்ளிட்ட பல சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாட்டினை கண்டித்து, கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கனை பிரதேசத்தில் ஏப்ரல் 19ஆம் திகதி பொதுமக்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற குழப்பத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 13 பொதுமக்களும் 20 பொலிஸ் உத்தியோகத்தர்களும் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.[6]

அவற்றுள் மே 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்கள், அரசியல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதுடன், அது தொடர்பான மனித உரிமை மீறல்கள், வன்முறைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்து ஆவணப்படுத்துவதே இந்த அறிக்கையின் நோக்கமாகும். தீர்மானம் எடுப்பதில் பொதுமக்கள் பங்கேற்கும் விதம்

5. Sri Lanka Development Update, October-2022, World Bank
6. https://www.bbc.com/sinhala/sri-lanka-61150034

மற்றும் அரச கொள்கைகளை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளும் விதம் தொடர்பான கடுமையான பிரச்சினையை எம்மால் அவதானிக்க முடிந்தது. பொதுமக்களின் எதிர்ப்புகள், எழுச்சிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வன்முறை மற்றும் அடக்குமுறைகளை ஏற்படுத்தும் முக்கிய பிரச்சினை, மக்கள் பங்காளர்களாக இருக்கும் ஜனநாயகத்தின் பிரச்சினையாகத் தோன்றுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி முதல் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் அமைதியான முறையிலேயே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். எனினும், அதில் ஒரு ஆக்ரோஷ மான தன்மை காணப்பட்டதோடு, 100 நாட்களுக்கு அதிகமாக ஜனாதிபதி செயலகத்தின் பிரதான நுழைவாயில் தொடர்ச்சியாக மூடப்பட்டிருந்தது. கோஷங்களை எழுப்புதல், கண்டன ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் என்பன போராட்டப் பிரதேசத்தில் இடம்பெற்றன. ஜனாதிபதி செயலகத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்ட போராட்டத் தளத்தில் ஒரு மாதிரி கிராமம் நிறுவப்பட்டது. அதனுடன் தொடர்புடைய நிறுவன, பொருளாதார, தளவாட மற்றும் தகவல் தொடர்பு செயன்முறைகளும் முன்னெடுக்கப்பட்டன.

ஒட்டுமொத்தத்தில், ஒரு மாற்று அரசியல் நடைமுறை பற்றிய அடிப்படை யோசனையும் அமைதியான உரையாடலும் அங்கு காணப்பட்டது. எவ்வாறாயினும், ஜனாதிபதி செயலகத்தின் பாதுகாப்பு, பொது இடங்களுக்குள் அத்துமீறி நுழைதல், ஒலி மாசுபாடு போன்ற பல சட்டரீதியான கரிசனைகளும் காணப்பட்டன.

காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்ட கட்சிசாரா செயற்பாட்டாளர்களை சந்தித்து கலந்துரையாடுவதற்கு தயாரென அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஏப்ரல் 13ஆம் திகதி அறிவித்தார். ஜனாதிபதிக்கு போராட்டக்காரர்கள் அனுப்பிய பதில் கடிதங்கள் எனக் கூறப்பட்ட பல கடிதங்கள் சமூக ஊடகங்களில் பரவின. அதன்படி, குறித்த கலந்துரையாடல்களை போராட்டக்காரர்கள் நிராகரிப்பதாக தெரவிக்கப்பட்டது. போராட்டத் தளத்தில் தங்கியிருந்த மக்களும் இதற்கு பதில் வழங்கியுள்ளனர். கலந்துரையாடல் அவசியம் இல்லையெனவும், 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பிரதமரின் அழைப்பிதழை கேலியாக சித்தரித்த ஒரு காட்சியும் போராட்டப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டது.

பிரதமருக்கு கட்சி சார்பற்றவர்கள் அனுப்பிய பதில் தொடர்பில் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, இளைஞர் ஆர்வலர்கள் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென தெரிவித்திருந்தார். “கலந்துரையாடலுக்கு அரசாங்கம் தயாராக இருப்பது போராட்டத்தின் வெற்றியாகும். போராட்டத்தின் ஒரு முக்கிய மூலோபாயமாக பேச்சுவார்த்தை உள்ளதால், அதனை இளைஞர்கள் நிராகரிக்கக் கூடாது” என அவர் தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில் தெரிவித்திருந்தார்.[7]

இந்நிலையில், கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த செயற்பாட்டாளர்கள் சிலருக்கும் இடையில் முதற்தடவையாக கலந்துரையாடலொன்று இடம்பெற்றதாக கூறப்பட்டது.

ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தினை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகினார். பதில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதோடு, பின்னர் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள் ஜூலை 22ஆம் திகதி பொலிஸார் மற்றும் இராணுவத்தால் வெளியேற்றப்பட்டனர். காலி முகத்திடலில் எஞ்சியிருந்த கூடாரங்களும் ஏனைய கட்டமைப்புகளும் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அகற்றப்பட்டன.

7. https://www.facebook.com/wwm.deshapriya

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் உள்ள போராட்டத் தளம் உட்பட முழு போராட்ட செயற்பாட்டிலும் பல பொதுவான அம்சங்களை அவதானிக்கலாம்.

- தொடர்ச்சியாக இரவு பகலாக இடம்பெற்ற போராட்டம்
- ஏதோ ஒரு வகையில் பெருமளவான மக்கள் இப்போராட்டங்களில் இணைந்தனர்.
- பொருளாதார பிரச்சினையே முக்கிய காரணமாக காணப்பட்டது.
- அரசியல் ரீதியாக கட்சி சார்பற்ற தன்மைக்கு முன்னுரிமை.
- அரசியல் கட்சிகள் தமது பாரிய இயக்கங்கள் மூலம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டன.
- அரசாங்கம், ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் (சிலவேளை மக்கள் விடுதலை முன்னணியின் 3 பேரைத் தவிர்ந்த 222 பாராளுமன்ற உறுப்பினர்கள்) பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை.
- ஜனாதிபதியை ”பைத்தியக்காரன்” என்று கூறி, அவரை இராஜினாமா செய்ய வேண்டுமென வலியுறுத்தல்.
- அப்போதைய நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவை போராட்டக்காரர்கள் காகம் என அழைத்தனர்.
- அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை வயது அடிப்படையில் ‘பழைய மைனா’ என்று திட்டி அவருக்கு எதிராக போராடினர். அதனடிப்படையில், முதியவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறி இளைஞர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.
- ‘அரகலய’ எனப்படும் இந்த கிளர்ச்சி நடவடிக்கை மூலம் ஒரு பொதுவான தலைமை உருவாகாமை.
- பேச்சுவார்த்தைகளுக்கு தயாரற்ற நிலை.
- அரசாங்கம் இராஜிநாமா செய்தபின்னர் இடம்பெற வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஒருமித்த கருத்து காணப்படாமை.
- கட்டமைப்பு மாற்றம் பற்றிய உரையாடல்.
- இந்திய கடன் வரியால் எரிபொருள் தட்டுப்பாடு ஓரளவு தவிர்க்கப்பட்டதால், போராட்டங்களின் தீவிரம் தணிந்து, மீண்டும் தட்டுப்பாடு தோன்றியபோது மீண்டும் தீவிரமடைந்தது.

## ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட “கோட்டாகோகம” எனப்படும் போராட்டத்தளத்தின் வரைபடம்[8]

**Gota go gama (rough map)**

This map is a rough plan created by observing the location of established places from the protest site. Only the locations that existed at the time the map was prepared are included here. It may have been updated by the time this is posted.




1. Entrance
2. Justice for Journalists - Massive flyers and other banners
3. Food/ water collection and distribution centre
4. The struggle ground
5. Sathyagrahaya campaign
6. Inter-university Bhikku Federation
7. Inter-university Students Federation
8. Socialist Youth Union
9. Ranavirugama
10. Centre of water refill
11. Centre of signing public petitions
12. Youth for a national policy
13. Public signature display board
14. Toilets
15. Zero plastic recycling center
16. Relatives of forcibly disappeared
17. Water tanks
18. Food/water collection and distribution centre - 2
19. Gotagogama name board
20. Open-air theatre
21. Water tanks
22. Legal aids truck
23. Teargas cinema
24. Kitchen
25. Mental health assistance
26. Sri Lanka Red cross
27. People's University
28. School
29. Library
30. Solar power generator
31. Legal assistance - 2
32. Centre of child care and painting
33. Memorialization site
34. Ayurveda medical centre
35. Media centre
36. St. John's Ambulance Service
37. Easter egg created in memory of the victims of the Easter Sunday attacks
38. Youth centre
39. Public platform
40. Campsite
41. Bathrooms
42. Art gallery
43. Campsite
44. Monument of easter attack victims
45. Paintings, wirk of art and public signatures
46. Protest site
47. Gota Go Home electrical panel

---

8. https://www.bbc.com/sinhala/sri-lanka-62489563

போராட்டக் களத்தின் கூகிள் வரைபடம்[9]




9. https://earth.google.com/web/search/Galle+Face+Green,+Colombo/@6.92883804,79.84343759,5.58128103a,188.29019327d,35y,170.75679352h,59.99943915t,0r/data=CigiJgokCfCmJIWUohtAEdFcXghqnBtAGenpWX1P91NAIbZX-VWeA9lNA

## 2022 மே 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பு

அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டுமென ஆளும் கட்சியினராலேயே கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், மே 6ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அப்போதைய ஜனாதிபதி இதனை நேரடியாகவே கூறியதாக பல தகவல்கள் பரவின. இதற்கிடையில், மே 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அப்போதைய பிரதமர் விசேட அறிவிப்பொன்றை வெளியிடுவாரென செய்திகள் பரவின.

மே மாதம் 9ஆம் திகதி அலரிமாளிகைக்கு வந்து அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அப்போது ஆளுங்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் அடங்கிய குழு, அவரை இராஜினாமா செய்ய வேண்டாமென கேட்டுக்கொண்டது. முன்னாள் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, ரோஹித அபேகுணவர்தன மற்றும் பலர் இந்த சந்திப்பை ஏற்பாடு செய்ததாக கூறப்பட்டது. இச்சந்திப்பில், அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நாமல் ராஜபக்ஷ, சனத் நிஷாந்த, மிலான் ஜயதிலக, காமினி லொக்குகே, சம்பத் அத்துகோரள, சி.பி.ரத்நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, இந்திக்க அனுருத்த ஹேரத், சஞ்சீவ எதிரிமான்ன மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் உபாலி கொடிக்கார, மொரட்டுவ மேயர் சமன்லால் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் அரசியல்வாதிகளும் பல்வேறு தொழிற்சங்க தலைவர்களும் உரையாற்றினர். சவாலுக்கு முகங்கொடுக்கும்போது அங்கிருந்து ஓடிவிடும் பழக்கம் தனக்கு இல்லையென இதன்போது உரையாற்றிய அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். இறுதியாக, தமது பதவியை இராஜினாமா செய்வதா இல்லையா என அவர் அங்கிருந்தவர்களிடம் கேட்டார். அவர் பதவி விலகக் கூடாதென அங்கிருந்தவர்கள் வலியுறுத்தி ஆர்ப்பரித்தனர்.

அதன் பின்னர் கூட்டத்தில் உரையாற்றிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரதமர் பதவியிலிருந்து திரு. மஹிந்த ராஜபக்ஷ விலகினால் அரசியல் நெருக்கடி ஏற்படுமென குறிப்பிட்டார். ஆகவே, அவர் பதவி விலகக் கூடாதென்றும், அனைவரும் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் ஜோன்ஸ்டன் குறிப்பிட்டார். “மைனாகோகம” என்ற பெயரை அவர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டதோடு, “போராட்டத்தை ஆரம்பிக்கலாம்” எனக் குறிப்பிட்டார். முன்னாள் பிரதமர் அவமதிக்கப்பட்டு, அலரிமாளிகைக்கு அருகில் மைனகோகம என்ற கிராமம் அமைக்கப்பட்டது[10]. “ஜனாதிபதியால் முடியாவிட்டால் நாம் அப்புறப்படுத்துவோம்.” என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர், கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினர் முதலில் அலரிமாளிகை அல்லது பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு அருகில் உள்ள போராட்டத் தளத்தின் மீது வன்முறையை பிரயோகித்து தாக்குதல் நடத்திவிட்டு, காலிமுகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த போராட்டத் தளத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர். ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலகக் கோரி போராட்டம் நடத்திய மக்களை அடக்கி அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பை முடிவுக்குக் கொண்டுவருவதே இந்த தாக்குதலின் பிரதான நோக்கமாக தென்பட்டது.

10. https://youtu.be/pMo4uRT3IEI

## ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட போராட்டத் தளத்தின் மீது 2022 மே மாதம் 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்


Acknowledgement of Complaint
Police Station
Date 2022/5/09
Name of Complainant
Nature of Complaint
I. B. Reference C2B I 03/49
Signature of Recording Officer
Name Rank/& Reg. No. of Recording Officer

திங்கட்கிழமைக்குள் ஏதேனும் நடக்கலாம் என்ற தகவல் போராட்டத்துடன் தொடர்புடைய சில குழுவினருக்கு மே 8ஆம் திகதியளவில் கிடைக்கப்பெற்றது. தாக்குதல் நடத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்பில், மக்கள் சட்டத்தரணிகள் அமைப்பின் சார்பில் சட்டத்தரணி சேனக பெரேரா மே 9ஆம் திகதி காலை கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவுசெய்தார். அலரிமாளிகையில் நடைபெறவிருக்கும் சந்திப்பினைத் தொடர்ந்து அவ்வாறான தாக்குதல் நடத்தப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் முறைப்பாட்டில் வலியுறுத்தியிருந்தார்[11].

மே மாதம் 9ஆம் திகதி அலரிமாளிகைக்கு அருகில் உள்ள போராட்டத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த போராட்டத் தளத்திற்குச் சென்ற மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், அப்பகுதியில் உள்ள மக்களின் பாதுகாப்பு தொடர்பாக தாம் கண்காணிப்பதாகக் குறிப்பிட்டார். ஆனால், அவர் வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், ஒருசில போராட்டக்காரர்கள் மட்டுமே கோட்டாகோகம பகுதியில் இருந்தனர். போராட்டத் தளத்திற்குள் திடீரென புகுந்த கும்பலொன்று தற்காலிக கலைக்கூடம், விளம்பர பலகைகள் மற்றும் கூடாரங்களை இடித்து அழித்து, சிலவற்றை தீயிட்டு எரித்தது. தம்முடன் நிராயுதபாணிகளாக இருந்த பல போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டு காயமடைந்ததாக போராட்டக்காரர்கள் குறிப்பிட்டனர். தாக்குதலை தவிர்ப்பதற்கான போதுமான பொலிஸார் சம்பவ இடத்தில் இல்லை.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறையைச் சேர்ந்த நிலூஷனா என்ற யுவதி பொலிஸாரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். போராட்டத் தளத்தில் 21 நாட்கள் கூடாரங்கள் இருந்ததாகவும், மே மாதம் 9ஆம் திகதி கோட்டகோகமவை தாக்கிய குழுவொன்று கூடாரங்களை சேதப்படுத்தி சிலவற்றை தீயிட்டு கொளுத்தியதாகவும் அவர் கூறினார். கோட்டகோகமவிற்குள் நுழைந்த கும்பல் நடத்திய தாக்குதல்களுக்கு மேலதிகமாக, பொலிஸாரின் தாக்குதலையும் போராட்டக்காரர்கள் எதிர்கொள்ள நேரிட்டதாக அவர் மேலும் கூறினார். குறிப்பாக தனது நண்பியொருவரை அந்த கும்பல் தாக்கியுள்ளது. அவரைக் காப்பாற்றச் சென்றபோது தாம் பொலிஸ் அதிகாரியொருவரால் தாக்கப்பட்டதாக நிலூஷனா குறிப்பிட்டார். குறித்த தாக்குதலில் காயமடைந்த நிலூஷனா, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தாக்குதலின் போது கோட்டகோகமவில் தங்கியிருந்த மருத்துவத்துறை மாணவரான அனுஷ்க கயான் லக்மால் கூறுகையில், அலரிமாளிகையில் இருந்து குண்டாந்தடிகளை ஏந்தியவாறு வந்த குழுவினர் வன்முறையில் ஈடுபட்டு, கூடாரங்களை சேதப்படுத்தியபோதும் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் தாக்குதலைத் தடுக்க முயற்சிக்கவில்லை எனக் குறிப்பிட்டார். அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள அலுவலகங்களில் பணிபுரிந்தவர்கள் போராட்டத் தளத்திற்கு விரைந்துசென்று தாக்குதல் கும்பலை கட்டுப்படுத்தியதாக அவர் மேலும் குறிப்பிட்டார். தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், போராட்டத் தளத்தில் சுமார் 48 பேர் இருந்தனர் என, அன்றைய தினம் தாக்குதலுக்கு உள்ளான இலக்கம் 96, எக்கமுத்துகம, செவனகல என்ற முகவரியில் வசிக்கும் பி. ஷாலிக அனுரங்க என்பவர் குறிப்பிட்டார். அங்கு தங்கியிருந்து கலைக்கூடமொன்றை நடத்திய கலைஞர் சுஜித் ரத்நாயக்கவின் கூடாரத்தை குறித்த கும்பல் அழித்தது. பெரிய

11. https://youtu.be/JSg-Buv9hJo

கும்பலொன்று கோட்டகோகமவை நோக்கி ஓடியதுடன், கணிசமான பொலிஸாரும் உள்ளே விரைந்து சென்றனர். குறித்த மோதலை பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு தடுக்க முடியும் என்பது அவரது நிலைப்பாடாக உள்ளது. ஆனால், வன்முறையில் ஈடுபட்ட சுமார் இரண்டாயிரம் நபர்கள் மீது அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாக்குதலில் இருந்து தனது சகாக்களில் ஒருவரை காப்பாற்றச் சென்றபோதே அனுரங்க தாக்கப்பட்டாரென அவர் குறிப்பிட்டார். அவரது தலையில் இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளனர். காயம் அதிகமானதால் அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த அறுவைச் சிகிச்சையின் போது அவரது மண்டையோட்டின் ஒரு பகுதி அகற்றப்பட்டுள்ளது. தாக்குதல் காரணமாக அவரது இடது கையும் செயலிழந்துள்ளது. தேசிய வைத்தியசாலையில் அவர் 14 நாட்கள் சிகிச்சை பெற்று வந்ததோடு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆரம்ப கட்டத்தில் அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றார்.



“தாக்குதலின் நேரடிக்காட்சிகளை விஷ்வ தனது கையடக்கத் தொலைபேசியில் பதிவுசெய்துகொண்டிருந்தபோது, குண்டர்கள் அவரை நோக்கி தாக்குதல் நடத்தச் சென்றதை அவதானித்து அவரை காப்பாற்றவதற்காகச் சென்றேன். என்னை இரு பொலிஸ் அதிகாரிகள் பிடித்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் யாரோ பின்னால் வந்து என்னை அடித்தனர். விஷ்வ யாரென எனக்குத் தெரியாது. குண்டர்கள் அவரை தாக்குவதற்காகச் சென்றனர் என்பது மட்டுமே எனக்குத் தெரியும்” என அவர் குறிப்பிட்டார்.

விஷ்வ என்றழைக்கப்படும் பிரியங்க விஷ்வஜித் அம்பலாந்தோட்டையைச் சேர்ந்தவர். தொடர் நாடகங்களில் அவர் உதவி இயக்குநராக பணியாற்றுகின்றார். அத்தோடு, சமூக தொண்டுகள், மரநடுகை மற்றும் பின்தங்கிய நிலையில் வாழும் சமூகங்களுக்கு உதவுதல் போன்ற விடயங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்திற்கு முன் நடைபெற்ற போராட்டத்தில் அவர் கலந்துகொண்டிருந்தார். “மே 9ஆம் திகதியன்று போராட்டத் தளத்தில் பெரிதாக மக்கள் கூட்டம் இல்லை. முன்னாள் பிரதமரின் ஆதரவாளர்கள் காலை 10 மணியளவில் அலரிமாளிகையில் இருந்து போராட்டக்காரர்களை தாக்குவதற்காக வரவுள்ளனர் என கேள்விப்பட்டோம். பின்னர், முடிந்தளவு மக்களைத் திரட்டி மனித சங்கிலியை அமைத்தோம். நான் கோட்டாகோகமவை நோக்கிச் சென்றபோது, கூடாரங்களுக்கு தீ வைக்கப்பட்டதையும் குண்டர்கள் மக்களை அடிப்பதையும் கண்டேன். சகல விடயங்களையும் காணொளியாக பதிவுசெய்ய நான் விரும்பியதால், லைவ் கெமராவை முடுக்கிவிட்டு நான் முன்னேறிச் சென்றேன். அப்போது குண்டர்கள் யாரையோ தாக்க முயல்வதைக் கண்டு நான் அங்கு ஓடினேன். அங்கு நான் மட்டுமே உள்ளேன் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். குண்டர்கள் என்னை நோக்கி வருவதைக் கண்டு நான் ஓட ஆரம்பித்தேன். அப்போது சுமார் 5 பேர் சேர்ந்து என்னைத் தாக்கினர். அவர்கள் எனது கழுத்திலும் முகத்திலும் அடித்தார்கள். நான் இறந்துவிடுவேன் என்றுதான் நினைத்தேன். அப்போது பொலிஸ் கலகத்தடுப்பு பிரிவு அதிகாரியொருவர் வந்து எனக்கு உதவியமை நினைவிலுள்ளது” என்றார்.



விஷ்வ மூன்று நாட்கள் வைத்தியசாலையில் இருந்தார். "நான் வைத்தியசாலையை விட்டு வெளியேறிய பின்னர், வீட்டிற்குச் செல்லாமல் நேரடியாக போராட்ட இடத்திற்கே சென்றேன். என்னை தாக்கியவர்கள் ஐந்து பேரில் இருவரை, நான் வைத்தியசாலையில் இருந்து வந்தபின்னர் அடையாளம் கண்டுகொண்டேன். அவர்கள் பற்றிய சகல விபரங்களையும் நான் பொலிஸில் சமர்ப்பித்தேன். அதன் பின்னர் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஆனால், ஏனைய மூவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை" என்றார்.

மே 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் அநுராதபுரம் தானயம்குளத்தைச் சேர்ந்த கே. எம். இந்துனில் செனரத் பண்டார என்பவரும் படுகாயமடைந்தார். "மே 9ஆம் திகதியன்று போராட்டக் களத்தில் மக்கள் கூட்டம் குறைவாகக் காணப்பட்டது. ஆளில்லா விமானத்தை (ட்ரோன்) நாம் அவதானித்தோம். எம்மை தாக்க வந்தவர்களே அதனை அனுப்பியுள்ளனர் என நாம் சந்தேகிக்கின்றோம். எம்மை தாக்க வரும் குண்டர்கள் தொடர்பாக நாம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினோம். இளைஞர்களின் கூடாரத்தை நோக்கி சுமார் எட்டு பேர் சென்றதை நான் அவதானித்தேன். அவர்களில், பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜனதிலக்கவும் இருந்தார். அவர்கள் என்னை தாக்கியபோது நான் தப்பிச்செல்ல முயன்றேன். எனினும், அவர்கள் எனது தலையிலும் முதுகிலும் தாக்கியதால் நான் கீழே விழுந்தேன். என்னால் நடக்க முடியாதென்பதை நான் உணர்ந்தேன். அத்தோடு, எனக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. பின்னர், நண்பர் ஒருவர் என்னை வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்றார்" என பண்டார அன்றைய நாள் சம்பவத்தை நினைவுபடுத்தினார்.

முதுகுத் தண்டுவடத்தில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக பண்டாரவின் கால்கள் செயலிழந்துள்ளன.



போராட்டம் ஆரம்பமான காலம் தொடக்கம், மதுஷா நிஷாந்தி என்ற வனவிலங்கு புகைப்படப் பிடிப்பாளரும் அங்கிருந்துள்ளார். மோதலை தடுப்பதற்கு போதுமான பொலிஸ் அதிகாரிகள் அல்லது வீதித் தடைகள் எதுவும் மே 9ஆம் திகதி அமைக்கப்படவில்லை என மதுஷா கூறுகின்றார். அவர்கள் தூரத்தே சத்தமிடுவது தனக்குக் கேட்டதாகவும், அந்தக் கும்பல் தடிகளுடன் ஓடி வந்ததாகவும் குறிப்பிட்டார். சில நாட்களுக்கு முன்னர் மழையில் நனைந்ததால் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அதனால் அங்கிருந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் பக்கமாக ஓடித்தப்பிக்க முயன்றதாகவும் கூறினார். ஆனால், தனது அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றை எடுத்துவர அவர் சென்றபோது, தடியுடன் காணப்பட்ட முதியவர் ஒருவர் அவரைப் பார்த்து சத்தமிட்டுள்ளார். அந்த நபர் தன்னை தாக்கவில்லை என்றும், அவருடன் வந்த மற்றொரு குழு அங்கிருந்த அனைவரையும் தாக்கியதாகவும் குறிப்பிட்டார். அவர்களை காப்பாற்றுவதற்கு எந்த பொலிஸ் அதிகாரியும் வரவில்லை என்றும் குறிப்பிட்டார்.

போராட்டப் பகுதியில் தங்கியிருந்த விசேட தேவையுடைய இராணுவ சிப்பாய்கள் மீதும் அந்தக் கும்பல் தாக்குதல் நடத்தியதாக கஹவத்தையைச் சேர்ந்த தனஞ்சய நாமல் என்ற இளைஞன் குறிப்பிட்டார். "விசேட தேவையுடைய சில இராணுவ சிப்பாய்கள் முன்னால் சென்றனர். அந்த கும்பல் உள்ளே புகுந்து அனைவரையும் இரும்புக் கம்பியால் தாக்கியது. விசேட தேவையுடைய இராணுவத்தினரைக்கூட தாக்கினர். போராட்டக்காரர்கள் மீது கற்கள் வீசப்பட்டன. கற்கள் என்னை தாக்கியதில் சிறு காயங்களுக்கு உள்ளானேன். பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த மற்றும் உள்ளூராட்சி மன்ற தலைவர் சமன் லால் பெர்னாண்டோ ஆகியோர் கும்பலுடன் அங்கு வந்து அவர்களை வழியனுப்பி வைத்ததை நாம் கண்டோம்" என்றார்.

குறித்த அரசியல்வாதிகளும் குண்டாந்தடிகளை வைத்திருந்ததாகவும், பொலிஸாரோ அல்லது விசேட அதிரடிப்படையினரோ நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார். "பேருந்து தரிப்பிடமொன்றின் பின்னால் நாம் சிக்கக்கொண்டோம். அங்கு சுமார் 25 பேர் இருந்தனர். கும்பலைக் கலைக்க பாதுகாப்புப் படையினரை அங்கு அழைக்காத நிலையை காணக்கூடியதாக இருந்தது. அன்றைய நிலைமையானது, அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளின் கட்டுப்பாட்டை மீறிச் சென்றது. போதிய எண்ணிக்கையில் பொலிஸார் அங்கு குவிக்கப்படாததால் இந்த சம்பவம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டதென தெளிவாகிறது. மிகவும் சிரமப்பட்டு எமது உயிர்களை காப்பாற்றிக்கொண்டோம். அவர்கள் கையில் சிக்கியிருந்தால் எமது உயிருக்கு ஆபத்து நேர்ந்திருக்கலாம்" என்றார்.

போராட்டம் நடந்த இடத்திலுள்ள முக்கிய விநியோக மற்றும் நன்கொடை கூடாரமான மக்கள் சக்தி கூடாரத்தில் தன்னார்வ தொண்டு செய்த பல்கலைக்கழக மாணவியான அஞ்சலி வந்துரகல கூறியதாவது: "எமது கூடாரங்கள் அழிக்கப்பட்டன. பண்டாரநாயக்கா சிலைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் மற்றும் கலைக்கூட கூடாரம் என்பன மோசமாக சேதமாக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. இந்த 35 நாட்களில் உருவாக்கப்பட்ட ஓவியங்கள் மற்றும் சிற்பங்களை மக்கள் பாதுகாக்க முயன்ற கலைக்கூடாரத்தின் மீது பிரதானமாக தாக்குதல் நடத்தப்பட்டது.

மக்களின் உடைமைகள், பைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை தாக்குதல்தாரிகள் தீ வைத்து எரித்ததாக அஞ்சலி மேலும் குறிப்பிட்டார். "தாக்குதல்தாரிகளுக்கு பொலிஸார் ஆதரவு வழங்கியமைக்கு தெளிவான சான்றுகள் உள்ளன. பொலிஸாருக்கு முன்பாகவே அமைதிவழி போராட்டக்கார்கள் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தினர். எங்களில் எவருக்கும் நீதியோ பாதுகாப்போ கிடைக்காமல் நான் அநாதரவாக உள்ளேன்" என்றார்.

தகவல் மூலம்: அனித்தா[12] மற்றும் டெய்லி மிரர்[13] பத்திரிகைகள்

கோட்டாகோகம பகுதியில் கலைக்கூடத்தை நடத்திய கலைஞர் சுஜித் ரத்நாயக்க, தாக்குதல் தொடர்பான தனது கருத்துக்களை இவ்வாறு பகிர்ந்துகொண்டார். "போராட்டத்திற்காக காலி முகத்திடலை தெரிவு செய்ததே ஒரு அரசியல் செயற்பாடாகும். உலகிற்கே திறந்த இடமாகக் காணப்படும் இடத்தை அவர்கள் போராட்டத்திற்காக தெரிவுசெய்தனர். அதேபோல், ஊடக உலகிற்கும் இது ஒரு திறந்தவெளியாகும். இவ்வாறான திறந்த வெளியில் கூடாரங்களை அமைத்துக்கொண்டிருக்கும்போது அவ்விடத்திலிருந்து தம்மை தன்னிச்சையாக வெளியேற்ற முடியாது என்பதை போராட்டக்காரர்கள் அறிந்துள்ளனர். அங்கு குழந்தைகள், மதகுருமார்கள், விசேட தேவையுடையோர் உள்ளடங்கியிருந்தமையால் குண்டர்கள் அல்லது பொலிஸார் தாக்கமாட்டார்கள் என அனைவரும் நம்பினர். காலி முகத்திடலில் பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. அவர்கள் நாடகம் நடித்து, ஓவியம் வரைந்து, பாடல்கள் பாடி, வன்முறையின்றி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆகவே, தங்களுக்கெதிராக அடக்குமுறைகள் முன்னெடுக்கப்படும் என அவர் நினைக்கவில்லை"

அங்கிருந்த கலைக்கூடத்திற்கு மே 9ஆம் திகதியன்று தீ வைத்த கும்பல், அனைத்தையும் அழித்தது. சுஜித் ரத்நாயக்கவின் கூற்றுப்படி, தனக்கு உடல் ரீதியாக எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும், காட்சிக்கூடமே அழிக்கப்பட்டது என்றும் கூறினார்.[14]

---

12. https://www.anidda.lk/2022/05/17/%E0%B6%9C%E0%B7%9D%E0%B6%A8%E0%B7%8F%E0%B6%9C%E0%B7%9D%E0%B6%9C%E0%B6%B8-%E0%B6%B4%E0%B7%8A%E0%B6%BB%E0%B7%84%E0%B7%8F%E0%B6%BB%E0%B6%BA%E0%B7%9A%E0%B6%AF%E0%B7%93-%E0%B6%B4%E0%B7%9C%E0%B6%BD/

13. https://www.dailymirror.lk/news-features/%E2%80%98GotaGoGama%E2%80%99-rises-through-ashes-after-Monday%E2%80%99s-nightmare/131-236714

14. https://youtu.be/Xb8b04cLwUw

## தாக்குதலுக்கு முன்னர் பொலிஸார் உரிய முறையில் செயற்படாமை

தாக்குதலின் போது கலகத் தடுப்புப் பொலிஸார் அங்கு பிரசன்னமாகியிருந்த போதும், தாக்குதலை நடத்தியவர்களை கலைக்கும் உத்தரவை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. தேசபந்து தென்னகோன் பிறப்பிக்கவில்லை. அதற்கு பதிலாக, கலகத் தடுப்பு பொலிஸ் குழுவை நியமித்து, தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்கு அருகில் வீதியின் குறுக்கே ஒரு மனித தடுப்பை ஏற்படுத்தினார். எனினும், பிரதான வீதியைக் கடந்த தாக்குதல்தாரிகள் காலி முகத்திடல் போராட்டத் தளத்தில் தாக்குதல் நடத்தினர். குண்டாந்தடிகளை ஏந்தியவாறு வந்த குழுவினரை எவ்வித தடையும் இன்றி கோட்டாகோம பகுதிக்குள் செல்ல பொலிஸார் அனுமதித்ததை, சமூக வலைத்தளங்களில் பரவிய பல காணொளிகளில் காணக்கூடியதாக இருந்தது. கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களும் பெரும்பாலும் போராட்டக்காரர்களை இலக்குவைத்தே நடத்தப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜகத் அல்விஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன ஆகியோரின் பணிப்புரைக்கு அமைவாக, மே 9ஆம் திகதி அமைதிவழி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான தாக்குதலை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ரமேஷ் பத்திரன மே 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.[15]

பாராளுமன்றத்தில் மேலும் உரையாற்றிய கலாநிதி பத்திரன, கூட்டத்திற்கு வந்த சிலர் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்கச் செல்லும் போது, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு.தேசபந்து தென்னகோனை தொலைபேசியில் அழைத்து தாக்குதலை தடுத்து நிறுத்துமாறு கேட்டுக்கொண்டதாகக் கூறினார். “தாக்குதலை பொலிஸார் தடுத்து நிறுத்துவர் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னகோன் என்னிடம் உறுதியளித்தார். வீதித் தடைகளை பொலிஸார் ஏற்படுத்தியுள்ளனர் என்று குறிப்பிட்டார். பின்னர் நான் ஜனாதிபதி மாளிகைக்கு கூட்டத்திற்குச் சென்றேன். நான் ஜனாதிபதி மாளிகையில் இருந்தபோது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க என்னை அழைத்து, மோதல்களை தடுக்க முடியாதுள்ளதெனக் குறிப்பிட்டார். இது தொடர்பில், ஜனாதிபதியை எச்சரிக்குமாறும், அனர்த்தத்தைத் தடுக்க தலையிடுமாறும் அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். அதன் பின்னரே இதுபற்றி நான் ஜனாதிபதிக்கு அறிவித்தேன்” என பாராளுமன்ற உறுப்பினர் பத்திரன மேலும் தெரிவித்தார்.

கோட்டாகோகம மீதான தாக்குதலை கட்டுப்படுத்த தான் முன்னெடுத்த திட்டங்களை செயற்படுத்துவதற்கு இரு மூத்த அதிகாரிகள் அனுமதிக்கவில்லையென, 2022 மே மாதம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சாட்சியமளித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார். குறித்த இரண்டு அதிகாரிகளும், கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைகளை பயன்படுத்த வேண்டாமென அவர் உட்பட பல மூத்த அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் அவர் சாட்சியமளித்தார். பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர், இரண்டு நீர்த்தாரை வாகனங்கள், கண்ணீர் புகை குண்டுகள் மற்றும் 200 இற்கும் மேற்பட்ட கலகத் தடுப்பு அதிகாரிகளை காலி முகத்திடலுக்கு வரவழைக்க நடவடிக்கை எடுத்ததாக அவர் கூறினார். எனினும், அதனை செயற்படுத்த தாமதிக்க வைத்த காரணத்தினாலேயே, கலகக்காரர்கள் பொலிஸாரை மீறி போராட்டக் களத்திற்குள் நுழைந்தனர் என மனித உரிமை ஆணைக்குழுவில் தேசபந்து தென்னகோன் சுட்டிக்காட்டினார்.[16]

15. https://youtu.be/WUOBRa7gYI4
16. https://www.lankaweb.lk/archives/42698

## நீதிமன்ற அறிக்கைகள் மூலம் வெளியான உண்மைகள்

கொள்ளுப்பிட்டி மற்றும் காலி முகத்திடல் போராட்டத் தளங்கள் மீதான தாக்குதல்களை தடுப்பது தொடர்பாக SD/IG/OUT/S-04/02/1185/2022 என்ற குறிப்பு இலக்கத்தின் கீழ் பொலிஸ் மா அதிபர் எழுத்து மூலம் வழங்கிய அறிவுறுத்தல்களை மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. தேசபந்து தென்னகோன் நடைமுறைப்படுத்தவில்லை என, தாக்குதல் தொடர்பில் கடந்த மே மாதம் 25ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுட்டிக்காட்டினார்.[17]

பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி றியன்சி அரசகுலரத்ன மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன ஆகியோர் நீதிமன்றில் உண்மைத்தரவுகளை முன்வைத்தனர். ஐயா, அநீதியான முறையில் நடந்துகொள்ளும் 12 நபர்களுக்கு மேற்பட்ட கூட்டத்தைக் கலைக்க ஒரு பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அதிகாரம் உண்டு என பொலிஸ் கட்டளைச் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. அப்போதும் கூட அந்த இடத்தில் இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் கூட்டத்தைக் கலைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. யாருடைய ஆசீர்வாதத்தின் பேரில் தேசபந்து தென்னகோன் இவ்வாறு ஆபத்தான முறையில் செயற்பட்டார் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் இதனை கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர். மே 8ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல்களை வழங்கியதையடுத்து, தனக்கு கீழ் உள்ள சிரேஷ்ட அதிகாரிகளுடன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் சந்திப்பொன்றை நடத்தினார். அப்போது, ஆர்ப்பாட்டத்தை கலைக்க வேண்டாம் என்றும் நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகை குண்டுகளை பயன்படுத்த வேண்டாம் என்றும் அவர் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார். ஆகவே, சந்தேகத்திற்கிடமின்றி இங்கு உண்மையான தகவல்கள் உள்ளன. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஏன் கைது செய்யவில்லை?

இதன்போது, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொண்டுள்ள கருத்து என்னவென, திறந்த மன்றில் நீதவான் திலின கமகே வினவினார்.

ஆர்ப்பாட்டத்தை தடுக்க சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெளிவான உத்தரவு பிறப்பித்திருந்தார் என்பதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதால், அவர் சாட்சியா அல்லது சந்தேக நபரா என்ற கேள்வி தங்களுக்கு இருப்பதாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்போது, சனத் நிஷாந்த மற்றும் தேசபந்து தென்னகோன் ஆகியோர் போராட்டக் களத்தில் கலந்துரையாடலில் ஈடுபடும் வகையிலான புகைப்படத்தை சுட்டிக்காட்டிய நீதவான், “சந்தேக நபரான சனத் நிஷாந்த, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்குவதை இந்தப் புகைப்படம் காட்டுகிறதா? இதனை நான் மிகவும் அற்பமான விவாதமாகவே நான் கருதுகின்றேன்” எனக் குறிப்பிட்டார்.

இந்த வழக்கு தொடர்பான பெரும்பாலான சாட்சியங்கள் மேல் மாகாணத்திலேயே இருப்பதால், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை தற்போதைய பதவியில் இருந்து இடமாற்றம் செய்யுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மன்றில் தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான நீதிமன்ற வழக்கு ஜூன் முதலாம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.[18]

தேசபந்து தென்னகோனை இடமாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர் விடுத்த கோரிக்கை தொடர்பில் சட்டமா அதிபர் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் தேசபந்து தென்னகோனை இடமாற்றம் செய்வதற்கு பொலிஸ் மா அதிபருக்கு அதிகாரம் இல்லை என்றும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலான் ரத்நாயக்க மன்றில் தெரிவித்தார்.

17. https://sinhala.adaderana.lk/news.php?nid=168222
18. https://newswave.lk/34307/

அவ்வாறாயின், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு.அஜித் ரோஹண எவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டாரென, பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பினர். பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஒப்புதலின் பேரில் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இந்த வழக்கில் பாரிய குற்றச்சாட்டிற்கு உள்ளான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை இடமாற்றம் செய்வதற்கு ஏன் முன்மொழியவில்லையென, பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன பொலிஸ் மா அதிபரிடம் வினவினார்.

இதற்கு பதிலளித்த பொலிஸ் மா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல், தமது மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகள் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மன்றில் குறிப்பிட்டார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திருமதி ஆயிஷா ஜினசேன குறிப்பிடுகையில், சம்பவ தினத்தன்று திரு. தேசபந்து தென்னகோன் பயன்படுத்திய அலுவலக தொலைபேசி மற்றும் தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் யாவும், தடயவியல் விசாரணைக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததற்காக பிரதான சந்தேக நபராக குறிப்பிடப்பட வேண்டிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பெயரை, இதுவரை ஒரு சந்தேகநபராகவும் குறிப்பிடப்படாமை ஆச்சரியமளிப்பதாக பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

“மூத்த அதிகாரியொருவர் வழங்கும் சட்டத்திற்கு மாறான அறிவுத்தல்களை பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயம் அவருக்கு இல்லை. எனவே, தேசபந்து தென்னகோனை பாதுகாப்பதற்கு கண்ணுக்குப் புலப்படாத கரமொன்று உள்ளதா என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்” என பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் ஆஜரான திரு.சரத் ஜயமான்ன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்போது, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளை மேற்பார்வையிடுவதற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியுமா என பொலிஸ் மா அதிபரிடம் நீதவான் திலின கமகே வினவினார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் மட்டும் போதுமானதல்ல என சுட்டிக்காட்டிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல், விசாரணையின் மூலம் கிடைக்கப்பெற்ற முழுமையான சாட்சிகளையும் ஆராய்ந்து முடிவெடுப்பதே பொருத்தமென குறிப்பிட்டார்.

காலி முகத்திடலில் இடம்பெற்ற போராட்டத்தின் மீதான தாக்குதல் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் விசாரணைகளை மேற்பார்வையிட குற்றவியல் மற்றும் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் பரிசோதகர் திரு.கமல் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. தேசபந்து தென்னகோனின் உரிமை தொடர்பாக, ஜனாதிபதி சட்டத்தரணி நளின் லட்டுவஹெட்டி கடந்த ஜூன் முதலாம் திகதி நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

“ஐயா, எனது கட்சிக்காரரை இடமாற்றம் செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் பிழையான கடிதமொன்றை அனுப்பியுள்ளார். எனது கட்சிக்காரரை மாற்றுவது அந்தக் கடிதத்தின் நோக்கமல்ல. அதனை பரிசீலிக்குமாறு மட்டுமே

கோரப்பட்டுள்ளது. எனது கட்சிக்காரரை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தவில்லை. எனது கட்சிக்காரரைப் பற்றிய தவறான தகவல்கள் ஒவ்வொரு நாளும் பரப்பப்படுகின்றன. அதன் காரணமாகவே இன்று நீதிமன்றில் ஆஜராகி உண்மையை தெளிவுபடுத்துகின்றேன்.

“ஐயா, சம்பவத் தினத்தன்று எனது கட்சிக்காரர் அவரது அலுவலகத்திலேயே இருந்தார். இந்த மோதலை தடுக்க ஆவண செய்யுமாறு மே 8ஆம் திகதி எனது கட்சிக்காரருக்கு பொலிஸ்மா அதிபர் எழுத்துபூர்வமாக அறிவித்திருந்தார். அதன் பிரகாரம், மோதலைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எனது கட்சிக்காரர் முன்னெடுத்தார். அலரி மாளிகைக்கு அருகில் ஒரு சம்பவம் நடப்பதாக தகவல் கிடைத்தவுடன் அவர் அங்கு சென்றார். சம்பவத்தன்று காலை கொழும்பு மத்திய பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு.நிஷாந்த சந்திரேஸ்கராவிற்கு பொலிஸ் மா அதிபரிடமிருந்து இரண்டு தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன. இந்த மோதலைத் தடுப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவருக்கு முரண்பாடான அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளன. அதன் பின்னர், இதுகுறித்து அமைச்சின் செயலாளரிடம் எனது கட்சிக்காரர் வினவியுள்ளார். அங்கும், மோதலை தடுப்பது தொடர்பான முரண்பாடான அறிவுறுத்தல்களே எனது கட்சிக்காரருக்கு கிடைத்துள்ளன. இந்த அறிவுறுத்தல்களில் காணப்பட்ட முரண்பாடுகள் காரணமாக எனது கட்சிக்காரர் உயர் அரசியல் அதிகாரியின் ஆலோசனைகளை பெற வேண்டி ஏற்பட்டது.

“ஜனாதிபதியுடன் எனது கட்சிக்காரர் தொலைபேசியில் 11 நிமிடங்கள் உரையாடியுள்ளார். அந்த அழைப்பிற்குப் பின்னரே கலவரக்காரர்களைக் கலைப்பதற்கு என் கட்சிக்காரர் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை மேற்கொண்டார்” என ஜனாதிபதி சட்டத்தரணி நளின் லட்டுவாஹெட்டி நீதிமன்றில் தெரிவித்தார்.

மே 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தின் அடிப்படையில், திரு. தேசபந்து தென்னகோனின் பங்கு தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் நடத்திய விசாரணைகள் பக்கச்சார்பானதென கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே ஜூன் 21ஆம் திகதி திறந்த மன்றில் அறிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பான விடயங்களை முன்வைத்த விசாரணை அதிகாரி பக்கச்சார்பாகச் செயற்பட்டதாக நீதிமன்றம் அவதானித்ததையடுத்து, இது தொடர்பாக நேரில் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

ஒகஸ்ட் மாதம் 3ஆம் திகதி இடம்பெற்ற விசாரணையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சார்பாக ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம தெரிவிக்கையில், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாகவும், சட்டமா அதிபர் திணைக்களத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறித்து தீர்மானம் எடுப்பதற்காக இதுவரை முன்வைக்கப்பட்ட விடயங்கள் போதுமானதல்ல என சுட்டிக்காட்டிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல், விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்ட அனைத்து ஆதாரங்களையும் ஆராய்ந்த பின்னர் இது தொடர்பில் தீர்மானம் எடுக்குமாறு பரிந்துரைத்தார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பில் சட்டமா அதிபர் மூன்று தடவைகள் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக நீதவான் சுட்டிக்காட்டினார். இந்நிலையில், அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நீதவான் வினவினார். மேலும், அறிவுறுத்தல்களை பின்பற்றத் தவறியமை தொடர்பில் உடனடியாக தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு நீதவான் அறிவுறுத்தினார்.

இதன் பிரகாரம், பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் குறித்த நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக தாமதம் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது.

## தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்கள் ஊடாக கிடைக்கப்பெற்ற தகவல்கள்

ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலையத்தின் சார்பாக 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 10 ஆம் திகதி சட்டத்தரணி லக்ஷான் பெர்னாண்டோவினால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொலிஸ் தலைமையகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு பதிலளிக்கும் வகையில், கொழும்பு மத்திய பிரிவு தகவல் அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.கே.ஜே. ரொஷான் டயஸ் எமக்கு தகவல்களை வழங்கினார். 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ் வழங்கிய தகவலின்படி, மே 9 தாக்குதல் தொடர்பில் 22 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தாக்குதல் நடத்தியவர்களை தாக்குதலுக்கு உள்ளானவர்கள் அடையாளம் காணத் தவறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை.

22 முறைப்பாடுகளில், இச்சம்பவத்துடன் தொடர்புடைய 22 பேரின் பெயர்ப்பட்டியலும் வழங்கப்பட்டுள்ளது. அதில் இருவர் பெண்களாவர். சேதங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட விபரங்களில் “சிறிய காயங்கள்” எனக் காணப்பட்டது. ஏனைய தகவல் மூலங்களின் ஊடாக நாம் கண்டறிந்த பலத்த காயமடைந்தவர்களின் பெயர்கள் இந்த தகவலில் உள்ளடக்கப்படவில்லை.

கூடாரங்களை தீயிட்டு எரித்தமை மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பாக போராட்டத்தின் பிரபல செயற்பாட்டாளர் அமல் சாலிந்த அளித்த முறைப்பாடு உள்ளடங்களாக, மோதல்களால் ஏற்பட்ட ஏழு சொத்து சேதங்கள் குறித்து தகவல் வழங்கப்பட்டுள்ளது. தற்காலிக கடைகள் மற்றும் அலுவலகங்கள் இடிக்கப்பட்டது தொடர்பாக இரண்டு முறைப்பாடுகள் உள்ளன. பேருந்தை சேதப்படுத்தியமை தொடர்பாக ஒரு முறைப்பாடு உள்ளது.

தாக்குதலின் பின்னர், போராட்ட இடத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சென்றதை பிரபல ஊடகங்கள் ஒளிபரப்பிய நிலையில், அவரும் தாக்குதலுக்குள்ளானார்[19]. எதிர்க்கட்சித் தலைவரை தாக்கியவர்களுள், நன்கறியப்பட்ட போராட்டக்காரர்களும் உள்ளடக்கம். எவ்வாறாயினும், இந்த தாக்குதல் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் முறைப்பாடு செய்ததாகவோ அல்லது பின்னர் குறிப்பிட்டதாகவோ தெரிவிக்கப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவருக்குச் சொந்தமான அரச வாகனம் ஒன்று இந்தத் தாக்குதலால் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் வழங்கிய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், காப்புறுதி இழப்பீட்டை பெறுவதை நோக்காகக் கொண்டே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மற்றொரு அரச வாகனம் தொடர்பாகவும் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான மற்றொரு வாகனமாக இதனைக் கருதலாம். இந்த முறைப்பாட்டின் நோக்கமும், காப்புறுதி இழப்பீட்டை பெறுவதாகும். ஆர்ப்பாட்டத்தின்போது அரச வாகனங்கள் மீது கற்கள் வீசி சேதமேற்படுத்தப்பட்டது.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்திற்குச் சொந்தமான தண்ணீர் பவுசருக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் சாரதி ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

பேருந்திற்கு சேதமேற்படுத்தப்பட்டமை தொடர்பாக மற்றுமொரு முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2022 மே 8 மற்றும் 9 அன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடந்த வன்முறைச் செயல்கள் தொடர்பாக நீதிமன்றங்களில் எத்தனை சட்ட நடவடிக்கைகள் மற்றும் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பதைக் கண்டறியும் பொருட்டு, ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலையத்தின் சார்பில் சட்டத்தரணி லக்ஷான் பெர்னாண்டோ தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2022 ஓகஸ்ட் 15ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தில் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தார். மேற்படி தகவல்கள் தமது திணைக்களத்திடம் அல்லது தமது பாதுகாப்பில் இல்லையென இலக்கம் 34, 2022 என்ற இலக்கத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கிய பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

19. https://youtu.be/-GM-fWMViv4

## வழக்கு எண் 22046/22இல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், உயிர் மற்றும் உடைமை சேதங்கள்

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் 22046ஃ22 தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம், மைனாகோகம, கோட்டாகோகம எனப்படும் போராட்டத் தளங்கள் மீதான தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு :

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற போராட்டப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களில் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை - 08

காயமடைந்த ஆனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாதவர்கள் - 19

காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை - 17

காயமடைந்த ஆனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாதவர்கள் - 32

09.05.2022 அன்று காயமடைந்தவர்கள் - 76 (அந்த சந்தர்ப்பத்தில் அடையாளம் காணப்பட்டவர்கள்)

தாக்குதலால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக 13 பேர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நவம்பர் மாதம் முதலாம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது .

## சட்ட நடவடிக்கையின் முன்னேற்றம்

காலிமுகத்திடத்திலும், அலரிமாளிகைக்கு அருகாமையிலும் அமைதிவழி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் வன்முறையில் ஈடுபட்டு சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில், கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் வழக்கு இலக்கம் 22046/22 இன் கீழ் 10.05.2022 அன்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான விடயங்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 2022ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி அறிக்கையிட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு மே 12ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் சம்பவத்துடன் தொடர்புடைய 17 பேருக்கு பயணத்தடை விதித்து உத்தரவு பிறப்பித்தது.

பயணத்தடை விதிக்கப்பட்ட 17 பேரின் விபரங்கள் வருமாறு[20]

1. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ
2. பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ
3. பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி
4. பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ
5. பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன
6. பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன
7. பாராளுமன்ற உறுப்பினர் சி.பி. ரத்னாயக்க
8. பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த
9. பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன ஜயரத்ன
10. பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரள
11. மஹிந்த கஹந்தகம
12. ரேணுகா பெரேரா
13. நிஷாந்த ஜயசிங்க
14. அமித அபேவிக்ரம
15. புஷ்பலால் குமாரசிங்க
16. திலிப் பெர்னாண்டோ
17. மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன்

இவர்கள் தாக்குதல்களை திட்டமிட்டு செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரிவிக்கப்படும் நிலையில், விசாரணைகளுக்காக இவர்கள் நாட்டில் தங்கியிருக்க வேண்டுமென பிரதம நீதவான் நீதிமன்றில் சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு மேலதிகமாக, தாக்குதலில் காயமடைந்தவர்கள் மற்றும் தாக்குதலை நேரில் பார்த்த சாட்சிகளும் மேலதிக விசாரணைகளுக்காக இந்த நாட்டில் தங்கியிருக்க வேண்டுமென சட்டமா அதிபர் முன்வைத்த விடயங்களை பரிசீலித்த நீதவான், சாட்சிகள் ஏழு பேர் வெளிநாடு செல்வதை தடைசெய்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எமக்கு கிடைத்துள்ள அண்மைய அறிக்கையின் பிரகாரம், 2022 ஒக்டோபர் நிலைவரப்படி, 36 சந்தேக நபர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் பெயரிடப்பட்டுள்ளனர். ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் நீதிமன்றத்தில்

20. https://youtu.be/gD8bhVMUZug

ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களது பெயர்கள் வருமாறு.

1. லியன ஆராச்சிகே நிஷாந்த மெண்டிஸ் – மொரட்டுவ
2. சுதுவதேவகே சுபாஷ் ஜயசாந்த பெர்னாண்டோ – இரத்மலானை
3. சின்ஹர அமல் புஸ்பகுமார டி சில்வா – பாணந்துறை
4. விதான பத்திரனகே மிலான் சஜித் ஜயதிலக்க (பாராளுமன்ற உறுப்பினர்) – கிரிந்திவெல
5. குருகமகே சனத் நிஷாந்த பெரேரா (பாராளுமன்ற உறுப்பினர்) ஆராச்சிக்கட்டுவ
6. லியனகே அபேரத்ன சுரேஷ் பிரியசாத் எனப்படும் டான் பிரியசாத் – வெல்லம்பிட்டிய
7. வென்னக்குடுவ சமன்லால் பெர்னாண்டோ – மொரட்டுவ
8. சமீர சத்துரங்க ஆரியரத்ன – கரந்தெனிய
9. கம்லாத் ஜயந்த ரோஹண – ஹன்வெல்ல
10. லியனகே தினித் கீத்தக பெரேரா – நிட்டம்புவ
11. ஜயமான்ன கன்கனம்லாகேபந்துல விஜேகுமார – கொஸ்கம
12. ஹேவாதேவாகே மஞ்சுள பிரசன்ன – களனி
13. புஷ்பலால் குமாரசிறி – ஹிக்கடுவ
14. அமிர்தானந்த அபேவிக்ரம – தும்மோதர
15. கொம்பங்ஞகே மினி பிரசாந்தி பொன்சேக்கா அக வெல்லே ரமணி – இரத்மலானை
16. அசங்க நாலக அல்லது சதா நாலக அல்லது அராபி வசந்த – கோட்டை
17. கொஸ்பலகே டொன் அருண பிரியசாந்த – பொரலஸ்கமுவ
18. வன்னக்கு வத்த வதுகே ரமேஷ் பானக பெர்னாண்டோ – மொரட்டுவ
19. காரியவசம் கட்டுகெட்டிய கமகே சமத் திவாங்க – மொரட்டுவ
20. விதானலாகே இனோகா நிசாந்த டி மெல் – வாதுவ
21. அஜந்தா லியனகே – கொழும்பு 12
22. கோனியா மலிங்கே சுபெம்சிறி அபோன்சு – மொரட்டுவ
23. சமரக்கொடி ஜயலத் வசந்த சரோஜனி ஜயலத் அக ஹந்தபங்கொட – இங்கிரிய
24. தெல்கே ஆரியதாச பீரிஸ் – மொரட்டுவ
25. கீரிகம பமுனவகே நரேந்திர துலிப் பெர்னாண்டோ – வெள்ளவத்தை
26. மஹிந்த ரத்ன ஒப் கஹந்தகம – கிரிவத்துடுவ
27. நிஷாந்த சமிந்த உபதிஸ்ஸ ஜயசிங்க – தங்காலை
28. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ (பாராளுமன்ற உறுப்பினர்)
29. குருப்பு ஆராச்சிகே சஜித் சாரங்க – கொழும்பு 6 (இவர் வெளியூருக்கு சென்றுவிட்டதாக பொலிஸார் நீதிமன்றிற்கு அறிவித்துள்ளனர்)
30. ரணபாகு முதியன்சலாகே துசித சம்பத் நாணயக்கார – பன்னிப்பிட்டிய
31. ஹொரணகே பிரதீப் சிரியந்த பெர்னாண்டோ – மொரட்டுவ
32. லியனகே ஷானக என்டணி பெர்னாண்டோ – மொரட்டுவ
33. மஹவத்தகே பிரியநாத் மக்கென்சி மென்டிஸ் மொரட்டுவ
34. பாபினஹந்திகே கயான் புஸ்பகுமார பீரிஸ் – மொரட்டுவ
35. கப்புவட்டாகே பிரகீத் சுஜீவ பண்டார – மொரட்டுவ
36. குருப்பு முதியன்சலாகே லலித் உதேஸ் மதுபானு – தெல்கொட

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பங்கு மற்றும் பரிந்துரைகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடமைப் பாதுகாப்புப் பணிப்பாளர் சட்டத்தரணி சுலரி லியங்கம, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீடு குறித்து ஆர்ப்பாட்டத்தின் ஆரம்பம் முதல் தனது கருத்தை வெளிப்படுத்தினார்.[21]

மிரிஹான சம்பவம், ரம்புக்கனையில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூடு, மே 9 வன்முறை, ஜூன் 9 சம்பவங்கள் மற்றும் ஜூலை 22 வன்முறைச் சூழ்நிலைகள் தொடர்பில் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இதில் பல விசாரணைகள் நிறைவுற்று அரசுக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த பரிந்துரைகளின் அடிப்படையில் வன்முறை சம்பவங்களுக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகள் மீது ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெறுகின்றன. பரிந்துரைகளின் பிரகாரம் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதோடு, அதன் நடவடிக்கைகளை மனித உரிமை ஆணைக்குழு கண்காணிக்கின்றது. மேலும், அடிப்படை உரிமைகளுடன் உயர்பாதுகாப்பு வலயங்கள் முரண்படுவதால், அரசாங்கத்திற்கு உரிய பரிந்துரைகள் வழங்கப்பட்ட பின்னர், அவற்றை மீளப்பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. சிவில் போராட்டங்களின் போது மக்கள் அலையை கட்டுப்படுத்துவது குறித்து பொலிஸ் மற்றும் ஆயுதப் படைகளுக்கான வழிகாட்டுதல்களை மனித உரிமைகள் ஆணைக்குழு தற்போது தொகுத்து வருகின்றது.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த விசேட அறிக்கையாளர்கள் குழுவொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்தது. சிவில் போராட்டங்களின் போது கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் உட்பட பல அதிகாரிகளை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைக்கு அழைத்தது. சிசிடிவி காட்சிகள் மற்றும் அனைத்து ஆவண ஆதாரங்களும் பரிசீலிக்கப்பட்டன.

2022 மே 9 தாக்குதல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்திய சுயாதீன விசாரணையின் பின்னர், பாதிக்கப்பட்டவர்களுக்கு பொலிஸார் இழப்பீடு வழங்க வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர், அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலை கட்டுப்படுத்தவோ அல்லது தடுக்கவோ தவறிய பொலிஸ் மா அதிபர் உட்பட போராட்ட இடத்தை சுற்றி கடமையில் ஈடுபட்ட சகல பொலிஸ் அதிகாரிகள் மீதும் விசாரணை நடத்த வேண்டுமென ஜனாதிபதிக்கு மனித உரிமைகள் ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுப்பதற்கு அவசியமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

2022 ஜூலை 25ஆம் திகதியன்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வெளியிட்ட செய்திக்குறிப்பில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன[22]: “அலரிமாளிகைக்குள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகள் பேசிய விடயங்களை பொலிஸாரால் துல்லியமாக கண்டறிய முடியவில்லையென தெரியவந்துள்ளது. மிகமுக்கியமான இந்த தகவல்களை பெற்றுக்கொள்ளாமைக்கு பாதுகாப்புச் செயலாளரின் கீழுள்ள புலனாய்வுப் பிரிவினரே காரணமென தெரிவிக்கப்படுகின்றது. (அரச புலனாய்வுப் பிரிவு)

“பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான சகல தகவல்களையும் பெற்றுக்கொண்ட பின்னர் அதனை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்ப வேண்டும். அவர் பின்னர் அவற்றை சம்பந்தப்பட்ட தமது உத்தியோகத்தர்களுக்கு அனுப்புவார். அரசாங்க சார்பு கூட்டத்தின் பின்னர் வரவிருக்கும் தாக்குதல் குறித்து அதிகாரிகளுக்கு பொலிஸ்மா அதிபர் விளக்கமளித்ததாகத் தோன்றினாலும், பின்னர் பொலிஸ்மா அதிபருக்குக் கிடைத்த தவறான தகவல்கள் இந்த வன்முறைத் தாக்குதலுக்கு பங்களித்ததாகத் தெரிகிறது. பொலிஸ் மா அதிபரின் இறுதிக் கண்காணிப்புக்கு உட்பட்டு போராட்டத் தளத்தில் நிலவும் நிலைமையைக் கையாளும் கடமை உயர் அதிகாரிகளுக்கு இருந்தது என்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.”

---

21. https://youtu.be/jYebDnbRXr4

22. https://www.hrcsl.lk/wp-content/uploads/2022/07/HRCSL-Press-release-26072022.pdf

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: “அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அமைதிவழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்கவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தவும் தவறியதன் மூலம், பொலிஸ்மா அதிபர் தனது கடமையை மீறியமை தெளிவாகத் தெரிகிறது. பொலிஸ் திணைக்களத் தலைவரின் இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்திலும் இடம்பெறாத வகையில் இது தொடர்பில் விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு தலைவர் சிபாரிசு செய்கிறார்”

“2022 மே 9ஆம் திகதி, அமைதிவழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்க இயலாமைக்காக கொழும்பில் அன்றைய தினம் கடமையில் இருந்த பொலிஸ் மா அதிபர் உட்பட அனைத்து சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களதும் இயலாமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு கௌரவ ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண முடிந்தால், அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு போதுமான இழப்பீட்டினை பொலிஸார் வழங்க வேண்டும்”

## ஆய்வின் பரிந்துரைகள்

1. தொன்மையான சட்டமான பொலிஸ் கட்டளைச் சட்டம் நவீனமயமாக்கப்பட வேண்டும். அல்லது நவநாகரீக உலகிற்கு ஏற்ற வகையில் புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

2. நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பை வழங்கக்கூடிய சக்திவாய்ந்த, சட்டத்தை மதிக்கும், சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனமாக பொலிஸ் சேவையை மாற்ற வேண்டும்.

3. சட்டத்தையும், சட்டத்தின் மீதான பற்றையும், பற்றுறுதியையும் நிலைநிறுத்தி, மக்கள் மத்தியில் அமைதியை உறுதிப்படுத்தும் வகையில், பொலிஸ்துறை மறுசீரமைக்கப்பட வேண்டும். பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில் பொலிஸ் துறை செயற்பட வேண்டும்.

4. ”பாதுகாப்பு” என்ற வார்த்தையின் ஜனநாயக அர்த்தம், ”தேசிய பாதுகாப்பு” என்ற சொல்லைக் கையாளும் அரசாங்கத்தையோ அல்லது அரசியல்வாதிகளையோ பாதுகாப்பதற்காக அல்ல, மக்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கை நிலைமையை உருவாக்கி மக்களைப் பாதுகாப்பதாகும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

5. பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையிலா உறவை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

6. மே 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களின் அடிப்படையில், ஏதேனும் ஒரு தரப்பினரின் விருப்பத்திற்கேற்ப பொலிஸார் செயற்பட்டனரா என்பது தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

7. மே 9 மற்றும் அதன் பின்னர் நடந்தேறிய சகல வன்முறைச் சம்பவங்களுக்கும் இலங்கை பொலிஸ் துறையினரே பொறுப்பு என்பதால், அரசாங்கம் முழு செயன்முறையையும் மீளாய்வு செய்து, இதுபோன்ற சம்பவங்கள் மீள நிகழாமைக்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

8. மே 9 மற்றும் அதன் பின்னர் நடந்தேறிய சம்பவங்களையும், பொலிஸாரின் கெடுபிடிகளையும் விசாரணை செய்ய சுயாதீன விசாரணை ஆணைக்குழுவொன்றை நிறுவ வேண்டும்.

9. தாக்குதலின் போது பொலிஸார் பொறுப்புடன் செயற்படாமை குற்றச்செயலாகும். எனவே உரிய விசாரண நடத்தப்பட்டு, இதற்கு காரணமானவர்களை சட்டத்தின் அடிப்படையிலும் ஒழுக்காற்று நடவடிக்கையின் அடிப்படையிலும் தண்டிக்க வேண்டும்.

10. தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும். அத்தோடு, வெளிப்படைத்தன்மை வாய்ந்த இழப்பீட்டு செயன்முறையொன்று அவசியம்.



**Right to Life Human Rights Centre**
No. 56/02, Palitha Place, Colombo 09.
Tel/ Fax : 011 266 9100
E-mail : right2lifelk@gmail.com
Web : www.right2lifelanka.org